# மாதிரி வினாத்தாள் - 2019-2020
# SAMPLE QUESTION PAPER -2019-2020

**பத்தாம் வகுப்பு** **மொத்த மதிப்பெண்கள்** : 80

[ X –STD ] Maximum marks: **80**

**தமிழ்** **கால அளவு** : 3 **மணி**

**TAMIL** Time Allowed : 3 hours

---

## பகுதி அ [படித்தல் உரைநடைப்பகுதி ]

SECTION – A [ READING COMPREHENSION ] MARKS – [15]

(1) பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. (5)

நேரு, காந்தி, லாலா லஜபதி ராய், பகத் சிங், ராஜகுரு, சுகதேவ், வ.உ. சிதம்பரனார் என்று நாம் அறிந்த தலைவர்களில் பெரும்பாலானோர் ஏன் சிறையில் அடைக்கப்பட்டார்கள்? ஏனென்றால், அவர்கள் இந்திய விடுதலைக்காகப் போராடினார்கள்..ஒரு நாட்டை அடிமைப்படுத்தும் உரிமை இன்னொரு நாட்டுக்குக் கிடையாது என்று அவர்கள் நம்பினர்.அதனால் சிறை.

இந்தியாவின் முதல் பிரதமரான நேருவின் அரசியல் வாழ்க்கை தொடங்கியதே சிறையில்தான்.மொத்தம் 9 முறை ஆங்கில அரசாங்கம் அவரைக் கைது செய்தது.லக்னோவில் உள்ள ஒரு சிறையில் அவர் முதலில் 88 நாள்கள் அடைக்கப்பட்டார்.பிறகு மீண்டும் கைதுசெய்து அதே லக்னோவில் சிறை.இந்த முறை 256 நாட்கள்.மீண்டும் விடுதலை.மீண்டும் சிறை.அலகாபாத்தில் உள்ள நைனி மத்தியச் சிறையில் 181 தினங்கள்.பிறகு டேராடூனில் 443 தினங்கள்.இப்படி வெவ்வேறு சிறைகளில் நேரு கழித்த தினங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 3,259 நாள்கள்.

பகத் சிங் சிறையில் இருந்து விடுதலை பெறவே இல்லை.ஆங்கில அரசு அவருக்குச் சிறை தண்டனை அளித்ததோடு நிற்காமல் மரண தண்டனையும் அளித்துவிட்டது.இவர் செய்த தவறு?நேரு கேட்ட அதே சுதந்திரத்தைத்தான் இவரும் கேட்டார்.ஆனால் தீவிரமாக. எனவே தீவிரமான தண்டனை.நேரு, பகத் சிங் இருவருமே சிறைச்சாலையை ஒரு நூலகமாக மாற்றிக்கொண்டார்கள்.நண்பர்கள் உதவியால் நூற்றுக்கணக்கான புத்தகங்களை வாங்கி வைத்துக்கொண்டு உள்ளேயே படிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.விரிவாக எழுதவும் செய்தார்கள்.

வினாக்கள்:

I. இந்தியாவின் முதல் பிரதமரான நேருவின் அரசியல் வாழ்க்கையை எங்கு தொடங்கினார்?

அ. லக்னோவில் ஆ.சிறையில் இ. டேராடூனில் ஈ. நைனியில்

II. சிறைகளில் நேரு கழித்த தினங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

அ . 3,159 நாள்கள் ஆ. 3,259 நாள்கள் இ. . 3,295 நாள்கள்
ஈ. 3,219 நாள்கள்

III. சிறையில் இருந்து விடுதலையே பெறாத விடுதலை வீரர் யார் ?

அ.நேரு, ஆ.காந்தி, இ. லாலா லஜபதி ராய் ,ஈ. பகத் சிங்

IV. பகத்சிங் பெற்ற தீவிரமான தண்டனை யாது?
அ. சிறை தண்டனை ஆ. மரண தண்டனை இ.ஆயுள் தண்டனை
ஈ.எதுவுமில்லை

V. சிறைச்சாலையை ஒரு நூலகமாக மாற்றிக் கொண்டவர்கள் யாவர்?
அ. நேரு, காந்தி, அ. லாலா லஜபதி ராய், பகத் சிங் இ. காந்தி, ராய்
ஈ. நேரு, பகத் சிங்

2. <u>பின்வரும் பகுதியைப் படித்து,கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக</u>. (5)

ஒரு மொழியின் செழுமை என்பது அதன் சொற்களில் இருக்கிறது. தமிழ், சொற்களுக்குப் பஞ்சம் இல்லாத ஒரு மொழி. மனிதன் உருவாக்கிய நீர்நிலை கட்டுமானங்களுக்கு அவன் பல பெயர்களை வைத்திருக்கிறான்.இலஞ்சி,கயம்,கேணி,கோட்டகம்,ஏரி, மலங்கன், மடு,ஓடை, வாவி, சலந்தரம்,வட்டம்,தடாகம், நளினி, பொய்கை, குட்டம், கிடங்கு, குளம்,கண்மாய்.

இயற்கையான நீர் ஊற்றுகள் உள்ள இடங்களில் அமைந்த நீர்நிலைகளுக்குப் "பொய்கை,ஊற்று" என்று பெயர். தானாகவே நீர் கசிந்து சிறிய அளவில் தோன்றும் நீர் நிலைகளுக்குச் 'சுனை','கயம்'என்று பெயர். ஊற்றுகள் எதுவும் இல்லாமல் மழைநீர் மட்டும் தேங்கி இருக்கும் சிறிய நீர்த்தேக்கத்திற்குக் 'குட்டை' என்று பெயர்.மக்கள் குளிப்பதற்காக உருவாக்கப்பட்ட நீர்நிலைகளுக்கு 'குளம்' என்று பெயர். குடிப்பதற்கும், சமைப்பதற்கும் போன்ற உணவுத் தேவைகளுக்குப் பயன்படும் நீர்நிலைகளை 'ஊருணி' என்று அழைத்தார்கள்.

நிலத்தால் மாறுபடும் நீரின் சுவையை இனிமையாக்க ஊருணிக் கரைகளில் நெல்லிமரங்களை நட்டார்கள்.அது நீரின் சுவையைக் கூட்டும்,கிருமிகளையும் கொல்லும் மருந்தாகவும் பயன்பட்டது.ஏர் உழும் தொழில்களுக்கு நீர் தரும் நீர்நிலைகளுக்கு 'ஏரி' என்று பெயர் வைத்தார்கள். வெறும் மழை நீரை மட்டுமே ஏந்தி தன்னுள் சேர்த்து வைத்துக் கொள்ளும் நீர்நிலைகளுக்கு 'ஏந்தல்' என்று பெயர். இதில் நதியின் நீர் சேர்வதில்லை. நீரைக் கால்வாய் மூலம் கொண்டு வந்து சேர்த்து அதன் மூலம் உருவாக்கப்பட்ட நீர்நிலைகளுக்குக் 'கண்மாய்' என்று பெயர்.

<u>வினாக்கள்</u>:

I. குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படும் நீர்நிலைகளை எவ்வாறு அழைத்தனர்?
அ.குட்டை ஆ.ஊருணி இ.குளம் ஈ.ஊற்று

II. ஒரு மொழியின் வளம் எதில் இருக்கிறது?
அ.சொற்களில் ஆ.எழுத்துகளில் இ.பேசுவதில் ஈ.எழுதுவதில்

III. நீரைக் கால்வாய் மூலம் கொண்டு சேர்க்கும் நீர்நிலை பெயரென்ன?
அ.சுனை ஆ.குட்டை இ .கண்மாய் ஈ.ஏரி

IV. ஏரியை எதற்குப் பயன்படுத்தினார்கள்?

அ.குளிப்பதற்கு ஆ.துவைப்பதற்கு இ.ஏர் உழும் தொழிலுக்கு
ஈ.சமைப்பதற்கு

V. நெல்லிமரங்களை எதற்காக நட்டார்கள்?

அ.நீரின் வேகத்தைக் கட்டுபடுத்த ஆ.நீரின் பாதையை மாற்ற
இ.நீரின் சுவையைக் கூட்ட ஈ. நீரின் வேகத்தைக் கூட்ட

<u>3. பின்வரும் பகுதியைப் படித்து,அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக</u> (5)

யானைக்கும் அடி சறுக்கும்' என்ற பழமொழி பழையது.'யானைக்கும் நீரிழிவு நோய் வரும்' என்பதுதான் புதியது.காட்டு விலங்குகளில் நம்மைப் பிரமிக்க வைக்கிற யானைக்கும் உடற்பருமன், நீரிழிவு, மாரடைப்பு போன்ற நோய்கள் வர ஆரம்பித்திருப்பதால், காட்டுயிர் மருத்துவ உலகம் மிகவும் கவலை கொண்டிருக்கிறதுகுறிப்பாக ., நம் ஊரில் கோயில் யானைகளுக்குப் பொங்கலும் பழமும் கொடுத்துக் கொடுத்து அவற்றை நீரிழிவுக்குள் சிக்க வைத்துவிட்டோம்.

விலங்குக் காட்சிச் சாலையில் உள்ள யானைகள் அதிகம் நடக்காமல், நமக்குக் காட்சிப்படுத்தப்படும் பொருளாகிப் போனதாலும் அதற்கும் நீரிழிவு நோய் வர ஆரம்பித்துவிட்டது ஆய்வுகளில் நடைபெற்ற சமீபத்தில் . யானையின்'லெப்டின் ஹார்மோன்', அது சுரக்கும் இன்சுலின் அளவு, போன்றவற்றைக் கணக்கிட்டு, 'கொஞ்சம் யானையை நடக்க விடுங்கப்பா' எனக் கால்நடை மருத்துவர்களின் குரல் சத்தமாக ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.

தன்இரைக்காகசாதாரணமாக 7முதல் 15 கி.மீ.வரைதினசரிநடந்தயானை, கோயில் வாசலிலும் வனவிலங்குக் காட்சிச்சாலையிலும் நிற்க வைக்கப்பட்டதால் அதற்குத் தொப்பையும் சர்க்கரையும் தொற்றிக் கொண்டது. அதே சிக்கல் தான் மனிதனுக்கும். மனிதனோ யானையோ காட்டில் இருந்தாலும் சரி, நாட்டில்இருந்தாலும் சரி நடந்தாக வேண்டும்.சர்க்கரை வியாதி ஒரு நோய் அன்று. அஃது ஒரு குறைபாடு.சரியான உணவுப் பழக்கம் உடற்பயிற்சி முதலியவற்றால் இக்குறைபாட்டை நம்மால் கட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும்.இந்தியா நோயற்ற இந்தியாவாக இருந்தால்தான் வலிமையான இந்தியாவாக இருக்க முடியும்.

## பகுதி-ஆ [ எழுதுதல் ]

SECTION – B [ WRITING ] MARKS – [14]

4 . அ ) நீ வாழும் பகுதியில் இலவச இணைய வசதி அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சியர்க்குக் கடிதம் எழுதுக. (6)

அல்லது

ஆ) பொது நூலகத்தைப் பயன்படுத்துவதால் விளையும் நன்மைகள் குறித்து அயலூர் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

[இரண்டு கடிதங்களிலும் உன் முகவரி: ந.நித்திலன் /ச.பூங்குழலி
15. நல்வாழ்வு குடியிருப்பு , அண்ணாநகர் மேற்கு , சென்னை-600040
எனக்கொள்க]

5. **பின்வருவனவற்றுள் எதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுது** (8)

i. அ முன்னுரை- உணவுதரும் தொழில்-உழவர்உலகத்தார்க்குஆணி– இந்தியா கிராமங்களில் வாழ்கிறது - இன்றையநிலை– விளைநிலங்கள்வீடுஆதல்-செயற்கை உரம் தரும் சீரழிவு- வெள்ளமும் வறட்சியும்-நகரம் நோக்கி நகர்தல்–தீர்வு- - முடிவுரை.

ii. முன்னுரை- எரிசக்தியும் நாட்டு வளர்ச்சியும் - மின்சாரம் முதலான எரிசக்திகள் - மரபு சார்ந்தவை. மரபு சாராதவை. இயற்கை ஆற்றலைப் பயன்படுத்துவோம். மாசு குறைப்போம்- முடிவுரை.

iii. முன்னுரை-மானுட மேன்மைக்கான வழிகள்- தன்னம்பிக்கை முதற்படி. ஓய்விலா உழைப்பு இரண்டாம் படி- விடா முயற்சியும் ஊக்கமும் அடுத்த படி-செயலைத் திட்டமிடு; திட்டத்தை செயல்படுத்து- வானம் வசப்படும்- முடிவுரை.

## பகுதி - இ [ இலக்கணம் ]
SECTION – C [ GRAMMAR ] MARKS – [15]

6 . **சான்று தருக (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** (3)

I. செய்யுளிசை அளபெடை
அ. உரனசைஇ ஆ.கெடுப்பதூஉம் இ.ஆஅளிய ஈ. உடுப்பதூஉம்

II. இருபெயரொட்டுப் பண்புத்தொகை
அ. செம்மலர் ஆ. முல்லை மலர் இ. வட்டநிலா
ஈ.முத்துப்பல்

III. பொதுமொழி
அ.படித்தான் ஆ.சுவைத்தேன் இ. சுவையான தேன் ஈ. தை

IV. வினைமுற்றுத் தொடர்
அ) சென்ற கோதை ஆ) நல்ல மாணவன் இ) படித்தான் பாரி
ஈ) கண்ணா வா !

V .தேமாங்காய்
அ) எழுத்தெல்லாம் ஆ) யாதானும் இ) வாழியவே ஈ) வந்தவன்

7. **நிரப்புக [எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ]** (3)

I. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் --------------எனப்படும்.
அ. வழுநிலை ஆ. வழாநிலை இ. கால வழாநிலை
ஈ. விடை வழாநிலை

II. நெய்தல் நிலம் என்பது ________.
அ. வயலும் வயல் சார்ந்த இடமும்
ஆ. மலையும் மலை சார்ந்த இடமும்
இ. கடலும் கடல் சார் இடமும்
ஈ. காடும்காடு சார் இடமும்

III. வினா ..........................வகைப்படும்.
அ )ஆறு ஆ) ஏழு இ ) எட்டு ஈ ) ஐந்து

IV. வெட்சி நிரை கவர்தல் என்பதில் உள்ள நிரை என்பதன் பொருள் ________
அ .பசு ஆ. பசுக்கூட்டம் இ.கூட்டம் ஈ. வரிசை

V. ஓர் ஆண்டின் கூறுகள் .......................... எனப்படும்.
அ ) மாதம் ஆ) பெரும்பொழுது இ) சிறு பொழுது ஈ) பருவம்

**8. கூறியவாறு செய்க (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் )** (3)

I. மயில் கத்தும் ( மரபு வழாநிலை ஆக்குக.)
அ. மயில் கூவும் ஆ. மயில் அகவும் இ. மயில் கொக்கரிக்கும்
ஈ. மயில் குனுகும்

II. மணற்கேணி (அசை பிரித்து வாய்பாடு கூறு )
அ. நிரை நேர் நேர் – புளிமாங்காய் ஆ. நேர் நேர் நேர் – தேமாங்காய்
இ. நிரை நிரை நேர் – கருவிளங்காய் ஈ. நேர் நிரை நேர் -கூவிளங்காய்

III. மருதம் (சரியான தொழிலைப் பொருத்துக.)
அ. ஏறு தழுவல் ஆ.களை எடுத்தல்
இ.கிழங்கு அகழ்தல் ஈ. வழிப்பறி செய்தல்

IV. ஆடுதல் ( தொழிற்பெயர் விகுதியை எழுதுக )
அ. அல் ஆ. தல் இ. ல் ஈ. ஆடல்

V. வேந்தர் (அளவுப் பண்புத்தொகையாக்குக )
அ. வாள்வேந்தர் ஆ. பெருவேந்தர் இ. மூவேந்தர் ஈ. சிற்றரசர்

**9. இலக்கணக் குறிப்பு எழுதுக. [எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ]** (3)

I. மாமழை
அ.இடைச்சொல் தொடர் ஆ. இடைத் தொடர்
இ. உரிச்சொல் தொடர் ஈ. எழுவாய்த் தொடர்

II. ஒரு விரல் காட்டி பெரிதோ சிறிதோ என்பது
அ. பால் வழு ஆ. திணை வழு இ. காலவழு ஈ.வினாவழு

III. பேறு

அ. முதனிலைத் தொழிற்பெயர்
ஆ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ. விகுதிபெற்ற தொழிற்பெயர்
ஈ. பகுதி

IV. நான் வந்தான்

அ. திணை வழு ஆ. இட வழு இ. பால் வழு ஈ. கால வழு

V. எஃஃகிலங்கிய

அ. ஆய்தம் ஆ.ஒற்றளபெட்டை இ உயிரளபெடை
ஈ. ஆய்தக்குறுக்கம்

<u>10. சரியான தொடரைத் தேர்வு செய்க [எவையேனும் மூன்றனுக்கு மட்டும்]</u> (3)

I. அ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது திணை வழு
ஆ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது பால் வழு
இ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது பால்வழுவமைதி
ஈ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது திணை வழுவமைதி

II. அ. இயல்பான நிகழ்வில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது இயல்பு நவிற்சி அணி
ஆ. இயல்பான நிகழ்வில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி
இ. இயல்பான நிகழ்வில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது நிரல்நிரை அணி
ஈ இயல்பான நிகழ்வில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது தீவக அணி

III. அ. எயில் காத்தல் கரந்தை
ஆ. எயில் காத்தல் உழிஞை
இ. எயில் காத்தல் தும்பை.
ஈ. எயில் காத்தல் நொச்சி

IV. அ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது வெண்பா
ஆ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது ஆசிரியப்பா.
இ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது.வஞ்சிப்பா
ஈ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது கலிப்பா

V. அ. நேர் நேர் நேர்–புளிமாங்காய்
ஆ. நேர் நேர், நேர் –தேமாங்காய்
இ. நேர் நேர், நேர் –கருவிளங்காய்
ஈ. நேர் நேர், நேர் –கூவிளங்காய்

**பகுதி- ஈ [ இலக்கியம் / தமிழ்ப்பாடநூல் ]**

SECTION – D [ LITERATURE / TEXT BOOKS ]  MARKS – [36]

11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக. (5)

தம்வீட்டுக்கு வரும் விருந்தினரை முக மலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல் விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தவர் கருதுகின்றனர்.உறவினர் வேறு ;விருந்தினர் வேறு.முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

அற உணர்வும் தமிழர் மரபும் திருவள்ளுவர் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே படைத்து உள்ளார்.இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்.முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்கிறார்.

**வினாக்கள்;**

I. உறவினர் -விருந்தினர் வேறுபாடு யாது.?
II. விருந்தோம்பல் என்றால் என்ன?
III. விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியுள்ளது யாது?
IV. திருவள்ளுவர் விருந்தோம்பலை எவ்வாறு வலியுறுத்துகிறார்?
V. எதற்கு இல்லறம் என்கிறார் திருவள்ளுவர்.?

12. பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி (4)

"வாளால் அருத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மாநீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே"

**வினாக்கள்.**

I. இச்செய்யுளடிகள் இடம் பெற்ற நூல்
அ)பெரிய புராணம் ஆ)சிலப்பதிகாரம் இ)திருவருட்பா ஈ)பெருமாள் திருமொழி
II. இச்செய்யுளைப் பாடியவர் யார்?
அ) சேக்கிழார் ஆ) இளங்கோவடிகள் இ) குலசேகர ஆழ்வார் ஈ ) ஆண்டாள்
III. இச்செய்யுளால் பாடப்படும் இறைவன் யார்?
அ) முருகன் ஆ)சிவன் இ)பார்வதி ஈ)திருமால்
IV. மாளாத என்ற சொல்லின் பொருள்
அ)சாகாத ஆ)தீராத இ )கெடாத ஈ) குறையாத

**13.பின்வரும் குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக.** (2)

I. செயற்கை ..........................கடைத்தும் உலகத்து
இயற்கை ............................செயல்

II. குற்றம்............................குடிசெய்து வாழ்வாரை
சுற்றமாய்ச் ........................உலகு

**14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி.** (8)

I. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உரைத்தன யாவை ?

II. கோசல நாட்டின் இயற்கை வளத்தையும் நாட்டு வளத்தையும் குறித்து எழுதுக.

III. இராசராசன் காக்கும் திருநாட்டின் இயல்புகள் யாவை ?

IV. காலக் கணிதம் பாடல்வழி கவியரசு உரைத்தனவற்றை விவரி..

**15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி.** (10)

I. மெய்நிகர் உதவியாளர் செய்யும் உதவிகள் சிலவற்றை எழுதுக.
II. மொழி பெயர்ப்பின் தொடக்க காலம் குறித்து எழுதுக.
III. தோற்பாவைக் கூத்து குறித்து எழுதுக...
IV. ம.பொ.சி அவர்கள் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றதற்குக் காரணம் என்ன?.
V. தமிழரின் அரசியல் அறம் குறித்து எழுதுக.

16. **ஏதேனும்** ஒன்று பற்றித் துணைப்பாடக் கட்டுரை எழுதுக: (7)

I. பாய்ச்சல் – கதைச்சுருக்கம்
II. கோபல்லபுரத்து மக்களின் விருந்தோம்பல்
III. விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

*****